வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 9269/ஆ5/2019 நாள் 04.12.2019

| | |
|---|---|
| பொருள் | : வேலூர் மாவட்டம்– தேர்வுகள்– மார்ச் 2020, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – மார்ச் 2019, +1 தேர்விற்குப் பின் பள்ளி இடைநின்றோர் – +1 பயின்ற பள்ளியின் வழியாகவே தேர்வெழுத அனுமதி வழங்குதல் – சார்பு |
| பார்வை | சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 129112 / H1 /2019 நாள் 03.12.2019 |

****

பார்வையில் காணும் கடிதத்தின் படி கடந்த மார்ச் 2019–ல் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை பள்ளி மாணாக்கராக எழுதியபின், பள்ளியில் தொடர்ந்து +2 பயிலாமல் மாற்றுச் சான்றிதழ் பெற்று பள்ளி இடைநின்ற மாணாக்கர் வேறு பள்ளியில் சேர்ந்து +2 பயிலவில்லையெனில், அவர்களை ஏற்கனவே +1 பயின்ற பள்ளியின் +2 தேர்விற்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் அவர்களது பெயர் இடம் பெற்றிருக்கும். அவர்களை ஏற்கனவே +1 பயின்ற பள்ளியின் மாணாக்கராகவே கருதி, அவர்கள் முதன்முறையாக மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வெழுதுவதற்கும், மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு (+1 ) தேர்வில் ஏற்கனவே தோல்வியுற்ற பாடங்களை எழுதுவதற்கும், செய்முறைத் தேர்வுகளை அதே பள்ளியில் எழுதுவதற்கும் கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் அனுமதி வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்களும், தங்கள் பள்ளியில் மேற்குறிப்பிட்டவாறு பள்ளி இடைநின்ற மாணாக்கர் இருப்பின், அவர்களது அசல் மாற்றுச்சான்றிதழையும், **+1 (Arrear) / +2** தேர்வுக்கான தேர்வுக்கட்டணத்தையும் பெற்று **16.12.2019–க்குள்** பள்ளியில் ஒப்படைத்து மார்ச் 2020 பருவத்தில் நடைபெறும் +2 தேர்வினையும், +1 தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கான தேர்வுகளையும் பள்ளி மூலம் எழுதலாம் என்ற விபரத்தினை சம்பந்தப்பட்ட மாணாக்கருக்கு அலைபேசி மூலம் தெரிவிக்க வேண்டும் எனவும் தலைமையாசிரியர்கள் இதில் தனிக்கவனம் எடுத்து சம்பந்தப்பட்ட மாணாக்கருக்கு இத்தகவலைத் தெரிவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பொருள் தொடர்பாக தலைமையாசிரியர்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகள் அடங்கிய செயல்முறைகள் இத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு** : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறை ஆணை

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

**பெறுநர்**

அனைத்து வகை மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும்
மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்/தாளாளர்கள்

**நகல்**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தகவலுக்காவும்
தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.

**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்,**

**முன்னிலை : முனைவர். சி. உஷாராணி, எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,**

**இயக்குநர்**

**ந.க.எண்.129112 / H1 / 2019** **நாள் : 03.12.2019**

**பொருள் :** மார்ச் 2020, மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத்தேர்வு – மார்ச் 2019 +1 தேர்வுக்கு பின் பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநின்றோர் – மாணாக்கர் மேல்நிலை முதலாமாண்டு பயின்ற பள்ளியின் வழியாகவே தேர்வெழுத அனுமதி வழங்குதல் – பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை :** அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.22.05.2017.

*****

**<u>ஆணை</u> :**

பள்ளி மாணவராக மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதிய பின்னர், பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநின்ற மாணாக்கரின் நலன்கருதி, நடைபெறவிருக்கும் மார்ச் 2020, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினையும், மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கான தேர்வுகளையும் அவர்கள் +1 பயின்ற பள்ளியின் வாயிலாகவே எழுதுவதற்கு கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் அனுமதி வழங்கப்படுகிறது.

மேற்காண் வகைத் தேர்வர்களை தங்கள் பள்ளி மாணவர்களுடன் தேர்வெழுத அனுமதித்தல் குறித்து **<u>அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.</u>**

1. தங்கள் பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத்தேர்வெழுதிய மாணாக்கர் பள்ளியிலிருந்து மாற்றுச்சான்றிதழ் பெற்றுச் சென்றிருப்பினும் அவர்கள் வேறு பள்ளியில் +2 சேரவில்லையெனில், அவர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுடனேயே பள்ளி மாணவராக மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினையும், மேல்நிலை முதலாமாண்டில் தோல்வியுற்ற பாடங்களுக்கான தேர்வுகளை மார்ச் 2020 மேல்நிலைத் முதலாமாண்டு பொதுத்தேர்வின் போதும் எழுதுவார்கள். அவர்கள் தேர்வெழுத இணையதளம் வழி தனியே விண்ணப்பிக்கத் தேவையில்லை.

2. எனினும், அம்மாணவர்கள் தற்போது தொழிற்பயிற்சி அல்லது பள்ளிக் கல்வி சாராத வேறு கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயின்று வருபவர்களாக இருப்பின், அவர்களும் பள்ளியின் வழி மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினை

2...

எழுதுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட தேர்வர்களுக்கு தங்கள் பள்ளியில் இருந்து வழங்கப்பட்ட +1 அல்லது +2 அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழை தேர்வர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**3.** அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ் வைத்துள்ள தேர்வர்கள் அனைவரும், தங்கள் பள்ளி மாணவர்களுடன் மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளை எழுத உள்ளனர் என்ற தகவலையும், அவர்கள் **11.12.2019 முதல் 16.12.2019 வரையிலான நாட்களில்** +1 அல்லது +2 அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழுடன் பள்ளிக்கு வந்து உரிய தேர்வுக்கட்டணத்தை செலுத்தினால் மட்டுமே தேர்வெழுத இயலும் என்ற தகவலையும், அவர்களுக்கு **பள்ளி தலைமையாசிரியர் 10.12.2019 தேதிக்குள் அலைபேசி வாயிலாகக் கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டும்.**

**<u>பள்ளியில் இருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று (வேறு எங்கும் சேர்ந்து பயிலாமல்) இடைநின்று மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை (முதன்முறையாக) எழுதவுள்ள மாணவர்களை தேர்வெழுத அனுமதித்தல்</u>**

**1.** மேல்நிலை இரண்டாம் ஆண்டுத் தேர்வினை எழுத விரும்பும் மாற்றுச் சான்றிதழ் பெற்றுச் சென்ற மாணாக்கரிடமிருந்து கண்டிப்பாக தங்கள் பள்ளியில் வழங்கப்பட்ட **அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழை** பெற்றுக் கொள்ளவேண்டும்.

**2.** இம்மாணவர்களுள், மார்ச் 2019, +1 தேர்வின்போது தேர்வுக் கட்டண விலக்கு பெறாதவர்களிடம் மட்டும் மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின்போது பெறப்பட்ட அதே கட்டணத்தினை, மார்ச் 2020 மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுதுவதற்கும் தேர்வுக்கட்டணமாகப் பெறவேண்டும்.

**3.** இம்மாணாக்கர் ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும மார்ச் 2020, தேர்வெழுதுவதற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தொகையினை (+1 Arrear List)-ன்படி கண்டிப்பாக அவர்களிடமிருந்து பெற வேண்டும். (No exemption)

**4.** மேல்நிலை இரண்டாம் ஆண்டுத் தேர்வு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை எழுதுவதற்கு அசல் மாற்றுச் சான்றிதழைத் திருப்பிக் கொடுத்த மாணாக்கரின் விவரங்களை மட்டும் (நிரந்தரப் பதிவெண், பெயர், அசல் மாற்றுச் சான்றிதழ் எண்& நாள் உள்ளிட்ட விவரங்களை) இத்துடன் இணைத்தனுப்பப்படும் படிவத்தில் பூர்த்தி செய்யவேண்டும்.

மேலும், மேற்குறிப்பிட்ட மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ், தேர்வுக்கட்டணம் ஆகியவற்றை (+1 / +2) தங்கள் மாவட்டத்திலுள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் **20.12.2019** அன்று ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கப்பட்ட படிவங்களின் நகலினை பள்ளித் தலைமையாசிரியர் வைத்திருக்க வேண்டும்.

மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்

1. மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டுத் தேர்வினை எழுதுவதற்கு அசல் மாற்றுச் சான்றிதழை திருப்பிக் கொடுத்த மாணாக்கரின் விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட படிவம்.

2. மாணாக்கரிடமிருந்து பெற்ற அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள்

தங்கள் பள்ளி மாணாக்கருடனேயே இம்மாணாக்கருக்கும் செய்முறைத் தேர்வினை நடத்த வேண்டும். செய்முறைத் தேர்வு நடத்தப்படும் தேதி குறித்த விவரத்தினை முன்கூட்டியே இம்மாணாக்கருக்கு பள்ளித் தலைமையாசிரியர் தெரிவிக்க வேண்டும்.

மேலும், தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு வழங்கும் சமயத்தில், மேற்குறிப்பிட்டவாறு அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழை மீள வழங்கிய இடைநின்ற மாணாக்கருக்கு மட்டுமே தேர்வுக்கூட நுழைவுச் சீட்டினை வழங்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிவுரைகளைப் பின்பற்றி மாணாக்கரை தேர்வெழுத அனுமதிக்காமல், அவர்களை அங்குமிங்கும் அலைக்கழிப்பதாக இவ்வலுவலகத்தில் புகார் பெறப்படின், சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இணைப்பு :** படிவம்.

ஒம்/–
இயக்குநர்

**பெறுநர்**
அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்

**HSE SECOND YEAR EXAMINATION MARCH 2020**

**EDU DISTRICT NO. & NAME :** **SCHOOL NO.&NAME :**

| SL NO. | CANDIDATE'S NAME | +1 PERMANENT REG.NO. | GROUP CODE | SCHOOL TRANSFER CERTIFICATE NO. & DATE | +1 (ARREAR) EXAM FEES | +2 EXAM FEES | CANDIDATE'S SIGNATURE | REMARKS |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

**SIGNATURE OF HEAD MASTER / PRINCIPAL**

**with School Seal**